# இலக்கியங்களில் நீதி

*பா. சுபாஷ்*
முதலாமாண்டு முதுகலைபட்ட மாணவன், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783902

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்ககாலத்தில் இருந்தும் சங்கம் மருவிய காலம் வரை மக்கள் வாழ்வியல் பல மாற்றங்களை அடைந்துள்ளனர். பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளை செதுக்க பல நீதி இலக்கியங்கள் தோன்றியுள்ளது. பல நீதி இலக்கியங்களின் கருத்துக்களாக முதலில் மனிதன் நாணயம் போன்ற நல்லவனுமாய் தீமையானவனுமாய் இருக்கின்றான். தற்பொழுது இந்த தன்மை குறைந்து கொண்டே வருவதை இங்கு காணலாம். மனித வாழ்வில் தற்போது அன்பு, பாசம், இரக்கம் போன்ற குணங்கள் குறைந்து செல்வத்திற்காக மட்டும் வாழ்ந்து வருகின்றான். இந்த உலகில் எதுவும் நிலை இல்லாத போது மனிதர்கள் அனைவரும் ஒன்று கூடி இருந்தாலும் உணர்வாலும் இனப்பிரிவாலும், தற்பொழுது பிரிந்த நிலையில் இருக்கின்றான் என்பதை உரைக்கின்றது. சங்க காலத்தில் அனைவருக்கும் சமமான நீதியை வழங்கியதை நீதி நூல்களின் மூலம் அறியலாம். இக்கால மனித வாழ்வு கனவு போன்றது. அதிலும் பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை, தீமை செய்ய வேண்டாம் என்று நீதி நூல்களின் கருத்துக்களை இலக்கியங்கள் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*சங்ககாலத்தில் இருந்தும் சங்கம் மருவிய காலத்தில் இருந்தும் தமிழ் மக்கள் வாழ்வியல் மாற்றம் அடைந்து வந்துள்ளனர். ஆனால் இன்றைய சமூக மக்களிடையே பழங்கால மக்களின் வாழ்வியல் முறைகள் மிகுந்த மாற்றத்திற்கு உள்ளாகி இருப்பதை காண முடிகிறது. பழந்தமிழரின் வாழ்க்கை முறையை சரியாக செதுக்க பல நீதி இலக்கியங்கள் இருந்துள்ளது. அந்த நூல்கள் பற்றியும் அவை கூறிய நீதி கருத்துக்கள் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.*

**மனித சமூகத்திற்கு நீதி**

*மனித வாழ்வு என்பது ஒரு நாணயம் போன்றது. ஒருபுறம் நன்மையும், மற்றொரு புறம் தீமையும் இருக்கும். அதை எவ்வாறு ஏற்று வாழ்கிறோமோ அதுவே வாழ்க்கையாகும். பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற உணர்வு பெரும் அளவில் நம் சமூகத்தில் குறைந்துவிட்டது பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் மற்றவர்களுக்கு தீமை செய்யாமல் இருப்பதே அறமாகும். இதனை,*

***பல் சான்றிரே பல் சான்றிரே***
***கயல்முன் அன்ன நரைமுதிர் திரைகவுள்***
***பயன்கில் முப்பின் பல்சான்றிரே***
***கணிச்சிக் கூர்ம்படை கருந்திறன் ஒருவன்***
***பிணிக்கும் காலை இரங்குவீர் மாதோ***
***நல்லது செய்தல் ஆற்றிர் ஆயினும்***
***அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்***
***எல்லாரும் உவப்பது அன்றியும்***
***நல்லாற்றுப் படுஉம் நெறியுமார் அதுவே!***

*இந்த புறநானூறு பாடல் வரிகள் நிலையற்ற வாழ்வில், நன்மை செய்யாவிடினும் தீமை செய்யக்கூடாது என்ற கருத்தை தெளிவுறுத்துகிறது.*

**ஈதல் இசைபட வாழ்தல்**

*மனித வாழ்வில் அன்பு, பாசம், அறம் எல்லாம் மறந்து செல்வத்திற்காக மட்டும் என்ற நிலை வந்து விட்டது. செல்வம் சேர்ப்பதற்காக மற்றவர்களுக்கு தீமை*

*செய்யவும் தயங்குவதில்லை. செல்வம் என்பது நிலையில்லாத ஒன்று. அதை பிறருக்கு கொடுத்து உதவினால் அது வாழ்வில் அறத்தை சேர்த்து புண்ணியத்தை உண்டாக்கும்.*

***ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது***
***ஊதியம் இல்லை உயிர்க்கு[2]***

*இந்த குறளின் மூலம் வள்ளுவர் நிலை இல்லாத இந்த பொருளை மற்றவர்களுக்கு கொடுத்து உதவினால் வாழ்வில் புகழ்பெற்று வாழ்வர் என்பதனை எடுத்துரைக்கிறார்.*

**உழைப்பும் உயர்வும்**

*உழைத்து வாழ்தல் என்ற கருத்தை, இலக்கிய நூல்கள் ஆணித்தரமாக நிலை நிறுத்துகிறது. ஒருவன் தன் முயற்ச்சியை விடுத்து மற்றவரிடம் இரந்து வாழ்தல் என்ற எண்ணம் வந்துவிட்டால் கொடுமையில் பெரும் கொடுமை அதுவே ஆகும்.*

***இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்***
***வன்மையின் வன்பாட்ட தில்[3]***

*உழைக்காமல் மற்றவரிடம் இருந்து பொருள் வாழ்தலை இழிவு என்று வள்ளுவர் கூறுவதை மேற்கண்ட குறள் செப்புகிறது.*

***யாதும் ஊரே யாவரும் கேளிர்***

*இந்த உலகில் எதுவும் நிலையான தன்மை கிடையாது. மனித வாழ்வு என்பது ஒரு நீர் குமிழ் போன்றது நிலையற்ற தன்மை போல் இதனை,*

***புக்கில் அமைந்நின்று கொல்லோ உடம்பினுள்***
***துச்சில் இருந்த உயிருக்கு[4]***

*உடம்பினுள் புகுந்து குடியிருந்து வருகின்ற உயிருக்கு நிலையான இடம் எதுவுமில்லை. இக்கருத்தை இக்குறள் பதிவு செய்கிறது.*

*மக்கள் என்ற பெயரில் அனைவரும் ஒன்றுபட்டு இருந்தாலும், உணர்வால் பல பிரிவுகளாய் உள்ளனர். இனவேறுபாடு, மொழி வேறுபாடு, மத வேறுபாடு ஆகியவையே மக்களை ஆட்டிப் படைக்கிறது. நம் இலக்கிய நூல்கள் இதற்கு மாறாய் நமக்கு அறம், நீதி ஆகியவை கற்பிக்கிறது.*

***யாதும் ஊரே யாவரும் கேளிர்***
***தீதும் நன்றும் பிறர் தர வாரா[5]***

*அனைவரும் சமம் என்ற உணர்வை தெளிவாக இந்த பாடல் வரிகள் உணர்த்துகிறது.*

***அனைத்துயிர்க்கும் ஒரே நீதி***

*சங்ககாலத்தில் நீதி வழங்கல் என்பது துலாக்கோள்முள்போன்றுநடுநிலைமாறாமல் இருந்தது என்று பல நூல்கள் கூறுகின்றன. ஒரே சமமான நீதி வழங்கப்பட்டது. ஒரு பசுவிற்காக தன் மகனையே கொன்று நீதியை நிலைநாட்டினார் மனுநீதிச் சோழன் இந்நிகழ்ச்சி கூறுகிறது.*

***அரும் பெறல் புதல்வனை***
***ஆழியின் மடித்தோன்[6]***

*இந்தப் பாடல் வரிகளே பசுவிற்கு நீதி வழங்கிய மன்னனின் வரலாறை சிறந்த முறையில் விளக்குகிறது.*

**நீதி காத்த அரசர்**

*பழந்தமிழ் மன்னர்கள் தாங்கள் வழங்கும் நீதியை தன் உயிரினும் மேலாக கருதினர். சிலம்பில் நெடுஞ்செழியன் வழங்கிய நீதி தவறாதல் அந்த செய்தி பகைவர்கள் செவிக்கு சென்றடைவதற்குள் தன் உயிரை விட்டான். இந்த நிகழ்ச்சி தன் மக்களுக்கு கிடைக்க பெறும் நீதியை விட தன் உயிர் பெரிதல்ல என்று அறிய முடிகிறது.*

***வல்வினை வளைதத் கோலை மன்னவன்***
***செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது[7]***

*தன்னுயிரை பெரிதென எண்ணாமல் நீதி நிலைத்து இருக்க வேண்டும் என்று உயிரை விட்டு நீதி நிலைக்க வேண்டும் என்ற உணர்வை அறிய முடிகிறது.*

**இக்கால வாழ்வு**

*இக்கால மனித வாழ்வு என்பது கனவு போன்றது. அதிலும் உண்டு, உறங்கி, பிறருக்கு துன்பம் செய்திடும் மனித வாழ்க்கை கனவிலும் பெரும் கனவு போன்றது ஆகும். இதனை,*

***உண்டு றங்கி யிடர்செய்து செத்திடும்***
***கலக மானியப் பூச்சிகள் வாழ்க்கையோர்***
***கனவி னுங்கன வாகு[8]***

இக்கால சமூக வாழ்வில் மக்கள் நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது என்ற கருத்து தெளிவாக அறியலாம்.

**முடிவுரை**

உலகில் வாழும் வாழ்க்கை சிறப்பானதாக அமையவும் வாழும் வரை அல்ல வாழ்க்கை வாழ்ந்த பின்பும் நீதி பேசப்பட வேண்டும். எனவே நீதி தவறாமல் வாழ்வோமேயானால் உறுதியாக வாழ்வு சிறப்படையும் சீர் பெறும் அத்தகைய வாழ்வியலை பழந்தமிழர் வாழ்ந்தனர் என்பதை விளக்கப்பட்டுள்ளது.

**சான்றென் விளக்கம்**

1. புலியூர்கேசிகன், புறநானூறு, பா.எ.195.
2. க.ப.அறவாணன், திருக்குறள், கு.321.
3. மேலது கு.325.
4. மேலது கு.340.
5. புலியூர்கேசிகன், புறநானூறு, பா.எ.192.
6. ந.மு.வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம், பா.எ.55, பா.வ.55-56.
7. மேலது, பா.எ.95, பா.வ.98-99.
8. ஸ்ரீசுப்பரமணிபாரதி, பாரதியார் கவிதைகள், பா.எ.3, பா.வ.3.

**துணை நூற்பட்டியல்**


1. அறவாணன்.க.ப, திருக்குறள், தமிழ்கோட்டம், மணிரத்தினம் தெரு, அய்யாவு குடியிருப்பு, அமைந்தகரை, சென்னை, முதற்பதிப்பு - 2007.
2. நாவலர் வேங்கடசாமி நாட்டார். ந.மு, சிலப்பதிகாரம், இளங்கணி பதிப்பகம், சென்னை.
3. புலியூர்கேசிகன், புறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2010.
4. ஸ்ரீசுப்பிரமணிய பாரதி, பாரதியார் கவிதைகள், புதுவை ஹரஸ்வதி, அச்சியந்திர சாலை.